# வட மாகாணக் கல்வித் திணைக்களம்
# ஆண்டிறுதிப் பொதுத் தேர்வு-2017
## பரதநாட்டியம்

**தரம் – 10 :** **நேரம் :- 03மணித்தியாலம்**

பகுதிI

1) அரங்கேற்ற நிகழ்ச்சியில் ஆரம்பத்தில் இடம் பெறுவது

1) தில்லானா 2) புஸ்பாஞ்சலி 3) கீர்த்தனை 4) வர்ணம்

2) பின்வரும் கிராமிய நடனங்களில் தொழில் சார்ந்த கிராமிய நடனம் எது?

1) காவடி2) கரகம்3) வேப்பிலை நடனம் 4) கொழுந்து நடனம்

3) அலாரிப்பு அமைந்துள்ள இராகம்

1) கல்யாணி 2) நாட்டை 3) வசந்தா 4) சாவேரி

4) உறவுமுறைகளை குறிக்கும் ஹஸ்தம் யாது?

1)தேவஹஸ்தம் 2) நவக்கிரகஹஸ்தம் 3) பாந்தவ்யஹஸ்தம் 4) ஸாதிஹஸ்தம்

5) சங்ககாலத்தில் நடனக்கலை அழைக்கப்பட்ட பெயர்

1) நாட்டியம் 2) சதிர் 3) குனிப்பு 4) நடனம்

6) கடத்தில் வட்டக் களரியை சுற்றி கடப்படும் கூத்து

1) தென்மோடி2) மன்னார்கூத்து 3) வடமோடி 4) வடபாங்கு

7) மட்டக்களப்பு உழவருக்குரிய கூத்து

1) மகிடிக்கூத்து 2) வசந்தன்கூத்து 3) காமன்கூத்து 4) பறைமேளக்கூத்து

8) ஜதியும் ஸ்வரமும் சேர்ந்து வரும் உருப்படி

1) அலாரிப்பு 2) பதம் 3) அஷ்டபதி 4) ஜதீஸ்வரம்

9) தித்தெய்ந்த தாதெய் அடவு அமைந்த தாளம்

1) ரூபகம் 2) அதி 3) துருவம் 4) ஏகம்

10) மகுட அடவு என அழைக்கப்படும் அடவு

1) குத்தடவு 2) தாதெய் தெய்த தடவு 3) தட்டடவு 4) கிடதகதரிகிட தொம் அடவு

11) அவஹித்த விநியோகத்தில் லீலா கந்துக தாரணம் என்பதன்கருத்து யாது?

1) மார்பு 2) மகிழ்ச்சியில் நடனமாடுதல் 3) பல்லக்கு 4) பந்துகளுடன் விளையாடுதல்

12) நாட்டிய உருப்படி வரிசையில் முதலாவதாக இடம்பெறும் நிருத்த உருப்படி

1) சப்தம் 2) அலாரிப்பு 3) ஜாவளி 4) வர்ணம்

The National Learning Portal for The General Education

13) பல அடவுகளின் சேர்க்கை

1) கோர்வை 2) சொற்கட்டு 3) தீர்மானம் 4) ஜாதி

14) கரையோர பிரதேசத்தை மையமாகக் கொண்ட தொழில்சார் நடனம் எது?

1) அரிவிவெட்டு நடனம் 2) தேயிலை கொழுந்து நடனம்

3) மீனவநடனம் 4) குறவன் குறத்தி நடனம்

15) குஞ்சரமல்லன் எனும் தலைமைச் சிற்பியைக் கொண்டு கட்டப்பட்ட ஆலயம்

1) மீனாட்சிஅ ம்மன் ஆலயம் 2) தஞ்சை பெருங்கோணில் 3) சிதம்பரம் 4) திருப்பதி

16) பத்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு எழும்பூர் ஜகத்நாத சபா வழங்கிய பட்டம்

1) நாட்டியமாணி 2) கலைமாமணி 3) நாட்டியக் கலாநிதி 4) தேச அபிமானி

17) மங்கள வாத்தியம், இராஜவாத்தியம் என அழைக்கப்படும் இசைக்கருவி

1) நாதஸ்வரம் 2) தவில் 3) உடுக்கு 4) மிருதங்கம்

18) கோயில் விழாக்களிலும், வழிபாட்டிலும் முழக்கப்படும் உடுக்கு வகை

1) பேருடுக்கை 2) சிற்றுடுக்கை 3) திமிரி 4) பாகி

19) மகாபலிச் சக்கரவர்த்தியின் கர்வத்தை அடக்க எடுக்கப்பட்ட அவதாரம்

1) நரசிம்ம 2) கிருஷ்ண 3) வாமண 4) பரசுராம

20) உலக இயல்பிற்கு அப்பாற்பட்டு கலை வடிவத்திற்கு முதலிடம் அளிக்கும் தர்பி

1) லோகதர்பி 2) பாத்திரதர்பி 3) நாட்டியதர்பி 4) அபாத்திரதர்பி

21) 0 | || இவ் அடையாளத்தை எடுத்துக் கொள்ளும் தாளம்

1) ரூபகம் 2) திரிபுடை 3) துருவம் 4) மட்டியம்

22) ஒரு நாட்டியப் பெண்ணிற்குரிய துணையாக உள்ள பகிப் பிராணன்கள் எத்தனை

1) 10 2) 8 3) 4 4) 6

23) பாத்திர பிராணனில் அஷ்ரமஹ என்பதன் கருத்து யாது?

1) புத்திக் கூர்மை 2) கண்பார்வை 3) சுற்றி ஓடுதல் 4) களைப்பின்மை

24) “வண்டுகள் தேன் குடித்து மயங்கின” இந்த கற்பனை வாக்கியத்தில் வண்டுகள் அபிநயிக்க பயன்படும் முத்திரை யாது?

1) தாமரசூரம் 2) ஹம்சபக்ஷம் 3) பிரமம் 4) காங்கூலம்

25) பரதநாட்டிய இசைக் கருவிகளுள் நரம்புக் கருவியாக உள்ள இசைக் கருவி

1) கிற்றார் 2) வயலின் 3) புல்லாங்குழல் 4) நாதஸ்வரம்

26) சங்கீர்ண நடைக்குரிய சொற்கட்டு யாது?

1) தகதிமி 2) தகதிமிதகதகிட 3) தகதிமிகிட 4) தக தகிட

27) தவில் வாசிக்கும் கழி செய்யப்படும் மரம்

1) பனைமரம் 2) ஆலமரம் 3) திருவாடி மரம் 4) புன்னைமரம்

The National e-learning Portal for the General Education

28) நீர் கற்ற அலாரிப்பின் தாளம்

1) ஆதி 2) ரூபகம் 3) ஜம்பை 4) திஸ்ரரகம்

29) வான் கைலாயம் என சிறப்பிக்கப்படும் ஆலயத்தை கட்டிய மன்னன்

1) மகேந்திர வர்மன் 2) நாயக்க மன்னன்3) குப்த மன்னன் 4) இராஜராஜசோழன்

30) சங்கீர்ணஜாதி துருவதாளத்தின் எண்ணிக்கை யாது?

1)20 2)29 3)22 4)13

31) தஞ்சைப் பெருங்கோயிலில் காணப்படும் நாட்டிய கரணங்கள்

1) 50 2) 60 3) 70 4) 81

32) உலகியல் வழக்கிற்கு அப்பாற்பட்டு ஆற்றுகைப்படுத்துவது

1) நாட்டியதர்மி 2) லோகதர்மி3) அபிநயம்4) உலகியல் வழக்கு

33) ராஜவாத்தியம் என்ற பெருமைக்குரியது

1) உடுக்கு 2) தவில்3) மிருதங்கம்4) தபேலா

34) பகவத் கீதையை உலகிற்கு வழங்க திருமால் எடுத்த அவதாரம்

1) கூர்மம் 2) நரசிம்மம்3) பலராமன்4) கிருஷ்ணன்

35) ஸ்வரமாலை என அழைக்கப்படும் உருப்படி

1) அலாரிப்பு 2) ஜதீஸ்வரம்3) சப்தம்4) வர்ணம்

36) வாரத்தில் ஒரு தடைவ பகல் முழுவதும் முழுக் கூத்தையும் ஆடிப்பழகுதல்

1) தினக்கூத்து 2) கிழமைக்கூத்து3) அடுக்குப்பார்த்தல்4) அரங்கேற்றல்

37) ஐந்து ஜாதிகளினால் ஏழு தாளங்கள் மாற்றமடைந்து உருவாகும் தாளங்களின் எண்ணிக்கை

1) 35 2) 403) 454) 50

38) தேயிலைக் கொழுந்து நடன மூலம் சித்தரிக்கப்படும் பிரதேசம்

1) கடற்கரை 2) காடு3) மலையகம்4) வயல் நிலம்

39) முல்லைத்தீவில் பயில் நிலையிலுள்ள கூத்து

1) வடமோடி 2) தென்மோடி 3) பறைமேளக்கூத்து 4) கோவலன் கூத்து

40) இரு கைகளிலும் ஒரே முத்திரைகள் பிடித்து அபிநயிக்கும் பாந்தவ்ய ஹஸ்தம்

1)தாய் 2)அண்ணன்,தம்பி 3)மாமி 4)மைத்துனன்

(40x1 =40 புள்ளி)

## பகுதிII

1ம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்கள் உள்ளடங்கலாக மொத்தம் ஐந்து நினாக்களுக்கு விடை தருக

**1)** 1) தவில் வாசிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கழி செய்யப்படும் மரங்களில் ஒன்று தருக?

2) தஞ்சைப் பெருங்கோயிலின் 1000 ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்ட ஆண்டு எது?

3) தாளத்தின் திரியாங்கங்களல் மாற்றமடையும் அங்கம் எது?

4) ஏலேலோ என்ற சொல் பாடல்களின் இடையே பயன்படுத்தப்படும் கிராமிய நடனம் எது?

5) பாத்திரப் பிராணன்களில் புத்திக்கூர்மை எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

6) துந்ததர்ஷனே என்றால் என்ன?

7) அலாரிப்பில் இடம்பெறும் தத்தெய்தாஹா அடவு, அடவு ரீதியில் அமைந்துள்ள தாளம் என்ன?

8) சம்பிரதாய நடன அரங்கேற்றம் ஒன்றில் காணப்படும் உருப்படிகளை இணைத்து எவ்வாறு அழைப்பர்?

9) மன்னார் பிரதேசத்தில் பயில் நிலையில் உள்ள இரு கூத்துக்களும் எவை?

10) நீர் கற்ற ஜதீஸ்வரத்தின் இராகம் தாளம் என்ன?

(1+1+1+1+1+1+1+1+2+2=12 புள்ளி)

**2)** i) பரதநாட்டிய சம்பிரதாய உருப்படிகளில் இரண்டாவதாக ஆடப்படும் நிருத்த உருப்படி எது? (2புள்ளி)

ii) இவ் உருப்படியின் இலட்சணத்தை எழுதுக? (5புள்ளி)

iii) இவ் உருப்படியின் 1வது கோர்வை தாள அங்க குறியீட்டுடன் எழுதுக (7புள்ளி)

iv) நீர் கற்ற இவ் உருப்படியின் ராகம், தாளம் யாது? (2புள்ளி)

**3)** பின்வரும் விநியோகம் கருத்துடன் எழுதுக?

1) மயூரம் 2)கற்கடகம் 3கபோதம் 4)அலபத்மம்

(5+3+3+4=15புள்ளி)

**4)** வரலாற்று ரீதியில் சங்ககால நடனக் கலைபற்றி விபரிக்குக (13புள்ளி)

**5)** i) தரசவதாரத்திற்குரிய கடவுள்யார்?

ii) பின்வரும் அவதாரம் எடுக்கப்பட்டதன் காரணமும் அவ் அவதாரங்கள் அபிநயிப்பதற்குரிய வலது, இடது கைகளை குறிப்பிடுக

1) கூர்மம் 2) வாமணம் 3) பரசுராமன் 4) கிருஷ்ணன் (4x3=12புள்ளி)

**6)** வடமோடி, தென்மோடி ஆட்டங்களுக்கிடையேயான வேறுபாடுகளை பட்டியல் படுத்துக. (13புள்ளி)

**7)** ஏழு தாளங்களும், ஐந்து ஜாதிகளும் சேர்ந்து 35 தாளங்கள் ஆகும் முறையை அட்டவணைப்படுத்துகெ (13புள்ளி)